**சார்பு நீதிமன்றம், தேனி**
**முன்னிலை: திருமதி.R.கீதா, B.A., B.L.,**
**சார்பு நீதிபதி, தேனி**
**2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ம் நாள் செவ்வாய்க்கிழமை**
**மேல்முறையீட்டு வழக்கு எண். 33/2015**
**மற்றும்**
**இ.ம.எண். 7/2026**
**உள்**
**மேல்முறையீட்டு வழக்கு எண். 33/2015**
**(CNR No: TNTH 03 – 000510 – 2015)**
**உள்**
**அசல் வழக்கு எண். 142/2014**

K. சண்முககுமார் .... மேல்முறையீட்டாளர் / வாதி

**// எதிர் //**

1. V. ராமசாமி என்ற ராமர்
2. V. வீமன்
3. V. கிருஷ்ணசாமி (இறப்பு) *
4. V. பழனிச்சாமி
5. தலைவர், ஜங்கால்பட்டி பஞ்சாயத்து
6. ஊராட்சி ஒன்றிய அலுவலர், தேனி
7. மாவட்ட ஆட்சியர், தேனி
8. சதாசினி .... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

(8th Respondent impleaded and amended as per order in I.A.No.4/2023 dated 20.11.2023)

தாவா மேல்முறையீடு தேனி, கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.142/2014 வழக்கில் 24.04.2015 ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் மேல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் தரப்பினர்கள் தகுநிலை :–**

**<u>அசல் வழக்கு எண். 142/2014</u>**

K. சண்முககுமார் .... வாதி

**// எதிர் //**

1. V. ராமசாமி என்ற ராமர்
2. V. வீமன்
3. V. கிருஷ்ணசாமி
4. V. பழனிச்சாமி
5. தலைவர், ஜங்கால்பட்டி பஞ்சாயத்து
6. ஊராட்சி ஒன்றிய அலுவலர், தேனி
7. மாவட்ட ஆட்சியர், தேனி .... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடானது இறுதி விசாரணைக்காக 09.02.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது, மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. ஜெயராமன், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. V. குருதேவராஜ், B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியாலும், 5 முதல் 8 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், இருதரப்பு வாதங்கள் கேட்டறிந்து, விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ள சாட்சி, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

## <u>தீர்ப்புரை</u>

இம்மேல்முறையீடானது கனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

தேனி அசல் வழக்கு எண்.142/2014 ல் கடந்த 24.04.2015 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய வேண்டியும், அசல் வழக்கு எண்.142/2014 ல் வாதி கோரியவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க வேண்டியும், மேற்கண்ட அசல் வழக்கு எண்.142/2014 ல் தோல்வியுற்ற வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 41 விதி 1 – ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. அசல் வழக்கு எண்.142/2014 ல் இந்தநிர் மேல்முறையீட்டாளர் வாதியாக இருந்து அசல் வழக்கு பிரதிவாதியான இந்தநிர் 1 முதல் 7 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்குரை சொத்து விவரத்தில் கண்ட சொத்தினை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கிட்டுள்ளார்.

**3. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:**

i) வழக்கு சொத்து நத்தம் நிலமாகும். அது வாதியின் தந்தை கிருஷ்ணசாமியின் நீண்ட நெடுங்கால சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்து மேற்படியார் அதை வாதிக்கு 03.01.2014 ம் தேதி பதிவு தான செட்டில்மெண்ட் மூலம் சுவாதீன அனுபவம் கொடுத்து அது முதல் வழக்கு சொத்து வாதியின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது. வழக்குரை சொத்தில் வாதி வீடு கட்ட நினைத்து அரசு மானியத்தில் வீடு கட்டுவதற்கு ஊராட்சி மன்ற தலைவர் மூலம் ஏற்பாடு செய்தார். அதில் வீடு கட்ட வாதி தேர்வாகி 17.06.2014 ம் தேதியில் ஊராட்சி மன்ற துணை தலைவர் மற்றும் ஊராட்சி அலுவலகத்தில் பணியாளர்கள் வழக்குரை சொத்தை

பார்வையிட்டு அளவீடு செய்தார்கள். அதன் பின்பு வழக்கு சொத்தில் கட்டிட வேலை ஆரம்பிக்க 18.06.2014 ம் தேதியில் காலை 07.00 மணிக்கு வாதி கருப்பத்தேவன்பட்டியில் வசிக்கும் கிருஷ்ணசாமி, சு. சுப்பையா, க.அருணாசலம், ந. கோபாலகிருஷ்ணன் மற்றும் சிலருடன் வந்து 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி புஷ்பம் முன்னிலையில் குமணன்தொழு கொத்தனார் குருசாமி மற்றும் அவருடைய ஆட்கள் வாணம் தோண்டுவதற்கு முற்பட்டு முழுமால் பிடித்து கம்புகள் ஊன்றி நூல் கட்டப்பட்டது. அன்றே காமாட்சிபுரம் ஈஸ்வரன் குழுவினர் கூலிக்கு வாணம் தோண்ட வந்தபோது 1ம் பிரதிவாதிக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் போன் மூலம் தகவல் சொன்னதின் பேரில் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவி தகராறு செய்தும் 2 முதல் 4 பிரதிவாதிகள் வாதியை போன் மூலம் மிரட்டியும் பணி செய்யவிடாமல் தடுத்துவிட்டனர்.

ii) வாதி மேற்படி சம்பவம் சம்பந்தமாக 18.06.2014 ம் தேதி வீரபாண்டி காவல் நிலையத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது புகார் அளித்தார். மேற்படி புகார் சம்மந்தமாக காவல்துறையினர் வழக்குரை சொத்தை பார்வையிட்டு விசாரணை செய்ததில், மேற்படி பிரச்சனை சிவில் பிரச்சனையாக இருப்பதால் நீதிமன்றம் மூலம் தீர்வு காண வலியுறுத்தப்பட்டது. மீண்டும் 1 முதல் 4 பிரதிவாதிகள் 12.07.2014 ம் தேதி வழக்குரை சொத்தில் வாதியால் வாணம் தோண்ட கட்டியிருந்த நூல், கம்புகளை பிடுங்கி எறிந்துவிட்டனர். காவல் நிலையத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்தார். மேற்படி புகாரின் பேரில் விசாரணை செய்த காவல்துறையினரிடம் பிரதிவாதிகள் எவ்வித உரிமை

ஆவணத்தையும் காட்டாமல் நீதிமன்றத்தின் மூலம் பார்த்துக்கொள்கிறோம் என்று எழுதி கொடுத்துவிட்டு சென்றுவிட்டனர். மேலும், வாதி தானபத்திரத்தின் அடிப்படையில் வழக்குரை சொத்துக்கு பட்டா வழங்க கோரி தேனி வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளார். இந்நிலையில் 1 முதல் 4 பிரதிவாதிகள் வழக்குரை சொத்தில் ஆக்கிரமிப்பு செய்தே தீருவோம் என்று சொல்லி வருகிறார்கள். எனவே, தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**4. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

வாதிக்கும், வழக்கு சொத்திற்கும் யாதொரு சம்மந்தமும் கிடையாது. வழக்கு சொத்து வாதியின் தந்தையின் நீண்ட அனுபவத்தில் இருந்து வந்ததாக கூறுவது பொய்யாகும். 1 முதல் 4 பிரதிவாதிகள் உடன்பிறந்த சகோதரர்கள். வழக்கு சொத்தானது 1939 ம் தேதிய பதிவு கிரைய ஆவணப்படி 1 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை வெள்ளையதேவருக்கு பாத்தியப்பட்டதாகும். அவர் அனுபவத்தில் இருந்து வந்து அவர் இறந்த பின்பு 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அவர்களுடைய தாயார் செல்லதாய் ஆகியோர்களால் இன்று வரை அனுபவிக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்படி சொத்து தற்போதைய கிராம சர்வே எண்.405/1ல் கட்டுப்பட்டதாகும். மேற்படி சொத்தில் வடமேற்கில் சுமார் 900 சதுரடியில் தானியங்கள் உலர்த்துவதற்கான களமாகவும், பிரதிவாதிகளால்

பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் வாதியின் தந்தை கிராம நிர்வாக அலுவலரிடம் பொய்யாக அனுபவ சான்றிதழ் பெற்றுள்ளார். அதன் அடிப்படையில் வாதியின் பெயரில் மோசடியாக ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார். பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடத்தில் வாதிக்கோ, அவருடைய தகப்பனாருக்கோ, எந்தவித உரிமையும் இல்லை. வாதி பிரதிவாதியின் மீது பொய்யான புகாரை காவல்துறையில் கொடுத்துள்ளார். காவல்துறையினர் வாதியை எச்சரித்து அனுப்பிவிட்டனர். வாதியின் தகப்பனாருக்கு பொய்யான அனுபவ சான்றிதழ் கொடுத்த கிராம நிர்வாக அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க கோரி 4ம் பிரதிவாதி 16.09.2014–ம் தேதியில் தேனி வட்டாட்சியரிடம் புகார் கொடுத்துள்ளார். அதேபோன்று வாதியின் மோசடியான நடவடிக்கைகள் சம்மந்தமாக 23.09.2014ம் தேதியில் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடமும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. வாதியின் வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல. பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**5. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் 5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 6, 7ம் பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

வழக்கு சொத்து வாதிக்கு 03.01.2014ம் தேதிய தான பத்திரம் மூலம் பாத்தியப்பட்டதாகவும், அதில் அரசு மானியத்தில் வீடு கட்ட உத்தரவு கிடைத்ததாகவும், அதனடிப்படையில் வழக்கு சொத்தில் வாணம்

தோண்டுவதற்கு ஊன்றி நூல் கட்டியதாக கூறுவதும் ஏற்புடையதல்ல. 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு மூலம் இல்லை. 5 முதல் 7 பிரதிவாதிகளை பொறுத்து எந்தவிதமான பரிகாரமும் கோரப்படவில்லை. இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக CPC பிரிவு 80–ன் கீழ் அறிவிப்பு அனுப்பப்படவில்லை. எனவே, இந்த பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

6. விசாரணை நீதிமன்றத்தால் இந்த வழக்கினை உரிய முறையில் தீர்மானிக்க ஏதுவாக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| **1.** | **1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?** |
| **2.** | **வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் என்ன?** |

7. விசாரணை நீதிமன்றத்தின் முன்னர் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆகவும், குருசாமி என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 4 ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆகவும், பரமசிவம் என்பவர் பி.வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

8. இரு தரப்பு வாதுரைகள், சாட்சிய சான்றாவணங்கள், வாத உரைகள் பரிசீலனை செய்து, தாவா சொத்து வாதியின் தந்தை கிருஷ்ணசாமிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட இடம் என்பதையும், தாவா சொத்தில் வாதியின் தந்தை கிருஷ்ணசாமி நீண்ட அனுபவத்தில் இருந்து வந்துள்ளார் என்பதையும், வாதி தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என தீர்மானித்து வழக்குரையில் வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க மறுத்து, இறுதியாக 24.04.2015 ம் தேதி அசல் வழக்கினை தள்ளுபடி செய்து தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது.

**9. கனம் தேனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 142/2014 ல் கடந்த 24.04.2015 ம் தேதி பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறைவுற்ற வாதி இம்மேல்முறையீட்டை கீழ்கண்ட காரணங்களுக்காக தாக்கல் செய்துள்ளார்:- அவை:**

i) விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும் தீர்ப்பாணையும் சட்டம், ஆதாரங்கள் மற்றும் வழக்கின் அனைத்து நிகழ்தகவுகளுக்கும் எதிரானவை என்றும், விசாரணை நீதிமன்றம் முழுமனதுடன் பரிசீலனை செய்யவில்லை என்றும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்மானிப்புகள் யாவும் நீதியின் நன்கு நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் சட்டத்தின் விதிகளுக்கு முற்றிலும் எதிரானவை என்றும், விசாரணை நீதிமன்றம் இரு தரப்பினரின் எதிரெதிர் வாதங்களை சரியான கண்ணோட்டத்தில் பரிசீலிக்கத் தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் சரியான முறையில் வழக்கினை பரிசீலிக்கவில்லை என்றும், வழக்கு தொடுத்த வாதி தனது

வழக்கை தெளிவாக நிரூபித்ததால், வாதிக்கு சாதகமாக அனைத்து பிரச்சினைகளையும் விசாரணை நீதிமன்றம் கண்டறிந்திருக்க வேண்டும் என்றும், விசாரணை நீதிமன்றம் வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும், மேலும் வாதி தனது வழக்கை நிரூபித்துள்ளதால் பிரதிவாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்திருக்க வேண்டும் என்றும், வாதி வழக்குச் சொத்தில் தனது உரிமையை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால், விசாரணை நீதிமன்றம் வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும்,

ii) வாதி நீதிமன்றத்திற்கு சுத்தமான கரங்களுடன் வந்திருப்பதால், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கைத் அனுமதித்து தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும், வாதி வழக்கு சொத்தின் மீதான தனது உரிமையை வா.சா.ஆ.1 மூலம் நிரூபித்ததால், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும், வழக்கு சொத்திற்காக அல்லாமல் மற்றொரு சொத்தின் மீது பிரதிவாதிகள் உரிமை கோரியதால், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும், வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக கோரியுள்ள பரிகாரம் மற்றும் வழக்கு சொத்து விவரம் ஆகியவற்றை பிராதில் சரியாக குறிப்பிட்டுள்ளதால், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும், பிரதிவாதிகளின் எதிர் வழக்கை வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் மூலம் வாதி நிராகரித்ததால், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும், முந்தைய வழக்கு

விசாரணைகளில் பிரதிவாதிகள், வாதியின் சொத்தை தெளிவாக ஒப்புக்கொண்டதால், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும், வாதி வாய்மொழி மற்றும் சான்றாவணங்கள் மூலம் தனது வழக்கை நிரூபித்ததாக விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும்,

iii) வாதி சமர்ப்பித்த உரிமை மூலம் தொடர்பான ஆவணங்களை பரிசீலிக்க விசாரணை நீதிமன்றம் தவறிவிட்டது என்றும், மறுபுறம், பிரதிவாதிகள் தங்கள் வழக்கை நிரூபிக்க எந்த ஆவணங்களையும் சமர்ப்பிக்கவில்லை என்றும், பிரதிவாதிகளின் கிரைய பத்திரமான பி.வா.சா.ஆ.1, பிரதிவாதிகள் எடுத்த வாதத்திற்கு முரணானது என்பதை விசாரணை நீதிமன்றம் பரிசீலிக்கத் தவறிவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் அதன் தீர்ப்பில் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தேவையற்ற கருத்துக்களை வழங்கியுள்ளது என்றும், வழக்கு சொத்து எவை மற்றும் வழக்கு சொத்தின் எல்லைகள் எவை என்பதை விசாரணை நீதிமன்றம் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது என்றும், மேலே கூறப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொள்ளாமல், விசாரணை நீதிமன்றம் வழக்கின் எல்லைக்கு அப்பால் சென்றுவிட்டது என்றும், விசாரணை நீதிமன்றம் வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும், வழக்கு சொத்தின் தன்மை மற்றும் சொத்தின் எல்லைகளை வாதி தெளிவாக நிரூபித்துள்ளார் என்றும், மேலும் மேற்குப் பக்கத்தில் பிரதிவாதியின் சொத்து உள்ளது என்றும், வழக்குச் சொத்தை பரிசீலிக்காமல், தேவையின்றி வழக்கு சொத்துக்கும் பிரதிவாதியின் சொத்துக்கும் இடையிலான சொத்தை

குறித்து பரிசீலித்துள்ளது என்றும், விசாரணை நீதிமன்றத்தின் முடிவுகள், காரணங்கள் நிலைத்தன்மையற்றவை மற்றும் நம்பமுடியாதவை என்றும், நத்தம் நிலத்தின் முதல் ஆக்கிரமிப்பாளர் என்ற முறையில், சொத்தின் உரிமையாளர் வாதியின் தந்தை என்பதால், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்திருக்க வேண்டும் என்றும், எனவே, தேனி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 24.04.2015ம் தேதியிட்ட அசல் வழக்கு எண்.142/2014ல் உள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்தும், இந்த மேல்முறையீட்டை செலவு தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**10. இம்மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளரான வாதி தரப்பில் அசல் வழக்கினை மீண்டும் சாட்சி விசாரணை செய்ய விசாரணை நீதிமன்றத்திற்கு மீண்டும் அனுப்பி வைக்குமாறு வேண்டி இடைநிலை மனு எண்.7/2026 தாக்கல் செய்துள்ளனர் எண்.10/2025யை உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 41 விதி 23 மற்றும் பிரிவு 151 – ன்கீழ் தாக்கல் செய்துள்ளார்.**

<u>i) இ.ம.எண்.7/2026 மனுவின் சுருக்கம் :</u>

அப்பீலில் கண்ட சொத்தை மனுதாரரின் தகப்பனார் கிருஷ்ணசாமி அனுபவித்து வந்து, மனுதாரருக்கு தான செட்டில்மெண்டு எழுதி கொடுக்கப்பட்ட சொத்தாகும் என்றும், தீர்ப்புரை 10வது பக்கத்தில் 8வது பாராவில் 2வது வரியில் "வாதியின் தகப்பனாரை வழக்கில் வாதியின் சாட்சியாக அழைத்து விசாரிக்கவில்லை" என கூறப்பட்டுள்ளது என்றும், அதனால் அப்பீல்வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக வாதியின் தகப்பனாரான "கிருஷ்ணசாமி" அவர்களை விசாரிக்க தயாராக உள்ளார் என்றும், தீர்ப்புரை

11 வது பக்கத்தில் வழக்கு சொத்து அமைந்துள்ள ஜங்கால்பட்டி கிராமத்தை சேர்ந்த நபர்கள் யாரையும் இந்த வழக்கில் வாதி (எனது ) தரப்பில் விசாரிக்கவில்லை எனவும் கூறப்பட்டுள்ளது என்றும், அதனால் அப்பீல்வாதி தரப்பில் 'K.M.பாண்டியராஜன் மற்றும் "சுருளி" அவர்களை விசாரிக்க வேண்டி உள்ளது என்றும், தீர்ப்புரை 12 வது பக்கத்தில் மனு சொத்தில் "வானம் தோண்ட வந்தவர்களில் யாரையும் வழக்கில் வாதி சாட்சியாக விசாரிக்கவில்லை" எனவும் கூறப்பட்டுள்ளது என்றும், அதனால் வானம் தோண்ட வந்த "ஈஸ்வரன்" அவர்களை வழக்கில் சாட்சியாக விசாரித்து வழக்கிற்கு வழக்குமூலம் உருவானதையும் நிரூபிக்க வேண்டி உள்ளது என்றும், அப்பீல் சொத்து வாதியின் தகப்பனார் நீண்ட காலமாக அனுபவித்து வாதிக்கு தான செட்டில்மெண்டு எழுதி கொடுத்து அப்பீல் வாதி அனுபவித்து வருகிறார் என்பதை நிரூபிக்க வேண்டி "ஆணையாளர் (பசுமை வீடு)" அவர்களையும் சாட்சியாக விசாரிக்க வேண்டி உள்ளது என்றும், மேற்கூறிய காரணங்களால் சாட்சிகளை விசாரித்து அப்பீல் வாதி வழக்கை நிரூபிக்க வேண்டி உள்ளது என்றும், இல்லையெனில் மனுதாரர் / அப்பீல் வாதிக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், எனவே இம்மனுவை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>ii) இ.ம.எண். 7/2026 மனுவிற்கு 1 முதல் 4 வரையிலான எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :</u>**

i) மனுதாரரின் மனுவானது பொய்யும் புரட்டுமானது என்றும், சட்டப்படியும், சங்கதிகள்படியும் நிலைநிற்கதக்கதல்ல என்றும், ஆரம்பத்திலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும் என்றும்,

இதனடியில் வியக்தமாய் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்ற யாவற்றையும் உண்மையானவைகள் என்று மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார் என்றும், மனுதாரர் கடந்த 2015ம் வருடம் அப்பீல் வழக்கு தாக்கல் செய்துவிட்டு, அதை தொடர்ந்து நடத்தாமல் வேண்டுமென்றே காலம் கடத்திவிட்டார் என்றும், அப்பீல்தாரர் வேண்டுமென்றே வழக்கினை நடத்தாமல் இருந்ததால் இந்நீதிமன்றமானது அப்பீல்தாரருக்கு நோட்டீஸ் சார்பு செய்ய கடந்த 17.12.2024ம் தேதியன்று உத்தரவிட்டது என்றும், அதன்பின் இறுதி வாய்ப்பாக இந்நீதிமன்றத்தில் அப்பீல்தாரர் நேரில் ஆஜராவதற்கு கடந்த 28.02.2025ம் தேதியன்று உத்தரவிட்டிருந்தது என்றும், இந்நீதிமன்ற உத்தவின்படி அப்பீல்தாரர் இதுவரை நேரில் ஆஜராகவில்லை என்றும், அப்பீல்தாரர் மேற்படி அப்பீல் மனுவினை முழுமையாக நடத்துவதற்கு விருப்பம் இல்லாமலும், நீதிமன்றத்தில் ஆஜராகாமலும் இருந்து வந்துள்ளார் என்றும், நீதிமன்ற உத்தரவின்படி நீதிமன்றத்தில் ஆஜராகாமல், வழக்கினை நடத்துவதற்கு அப்பீல்தாரர் சார்பாக கடந்த 16.12.2024ம் தேதியன்று ஓர் பதிவில்லாத பவர் எழுதி கொடுத்ததாகவும், அதை வழக்கில் தாக்கல் செய்ய வேண்டுமென பவர் ஏஜெண்ட் மூலமாக புதிய வழக்கறிஞரை நியமித்து மனு தாக்கல் செய்து, மேற்படி மனுவும் இ.ம.எண்.6/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, முழு விசாரணைக்குப்பின் இந்நீதிமன்றத்தால் கடந்த 28.07.2025ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி தள்ளுபடி செய்யப்பட்டதை எதிர்த்து எந்தவித மேல்முறையீடும் செய்யாமல் இ.ம.எண்.6/2025 மனுவின் ஆவணங்களை வைத்து சுமார் 6 மாதங்கள்

கழித்து செல்லத்தகாத, சட்டப்படியும் சங்கதிகள்படியும் நிலைநிற்கத்தகாத இந்த மனுவினை தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தின் நேரத்தினை வீணடித்து வருகிறார் என்றும்,

ii) ஆர்டர் 41 ரூல் 23 சி.பி.சி.

"Order 41 Rule 23: Remand of case by Appellate Court .- Where the Court from whose decree an appeal is preferred has disposed of the suit upon a preliminary point and the decree is reversed in appeal, the Appellate Court may, if it thinks fit, by order remand the case, and may further direct what issue or issues shall be tried in the case so remanded, and shall send a copy of its judgment and order to the Court from whose decree the appeal is preferred, which directions to re-admit the suit under its original number in the register of civil suits, and proceed to determine the suit; and the evidence (if any) recorded during the original trial shall, subject to all just exceptions, be evidence during the trial after remand.

[23A. Remand in other cases .- Where the Count from Whose decree an appeal is preferred has disposed of the case otherwise than on a preliminary point, and the decree is reversed in appeal and a re-trial is considered necessary, the Appellate Court shall have the same powers as it has under rule 23.

iii) இந்தநிர் வழக்கின் தீர்ப்பில் தீர்ப்பின் இறுதியாக 13 மற்றும் 14 பத்திகளில் "தாவா வழக்கை பொறுத்தமட்டில் வழக்கு சொத்து வாதியின் தகப்பானாரின் அனுபவத்தில் இருந்து வந்து அதன்பின்பு வாதியின் அனுபவத்தில் இருந்து வந்தது என்பதை நிரூபிக்கும் விதத்தில் எந்த ஆவணமும், வாய்மொழி சாட்சியமும் வாதியை தவிர்த்து

அளிக்கப்படவில்லை. மேலும் கிராம நத்தம் சொத்தை பொறுத்தமட்டில் அது ஒப்படைவு செய்யப்படாத நிலையில், அதில் எந்த உரிமையும் அதில் இருக்கக்கூடிய நபர்களுக்கு ஏற்படாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தின் 2010 (3) TNLJ பக்கம் 643 தீர்ப்பின் மேற்கோள் காட்டியும், 2008 (6) CTC பக்கம் 237 தீர்ப்பினை மேற்கோள் காட்டியும் கடந்த 24.04.2015ம் தேதியன்று வழக்கினை விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது என்றும், வழக்கானது எந்த ஒரு முதல்நிலை எழுவினாவின் அடிப்படையிலும் தள்ளுபடி செய்யப்படவில்லை என்றும், விசாரணை நீதிமன்றம் வழக்கினை முழுமையாக விசாரிக்காமல் ஏதேனும் ஒரு முதல்நிலை எழுவினாவின் அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக மேல்முறையீட்டு நீதிமன்றம் கருதி, அப்பீல் வழக்கில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பினை தலைகீழாக மாற்றினால் மட்டுமே மேற்படி சி.பி.சி. ஆர்டர் 41 ரூல் 23ன் படி மறுவிசாரணைக்கு அனுப்பப்படும் என தெளிவாக உள்ளது என்றும், இந்தநிர் வழக்கில் எந்த ஒரு முதல்நிலை வினாவும் வனையப்படாமல், முழு விசாரணை மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலும், தகுந்த சட்டங்களின் அடிப்படையிலும் தீர்வு செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே, இம்மனுவினை எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**11. இம்மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் யாதெனில் :**

| | |
|---|---|
| **1.** | **அசல் வழக்கில் சாட்சிய விசாரணை செய்ய வேண்டி அசல் வழக்கினை விசாரணை நீதிமன்றத்திற்கு மீண்டும் அனுப்பலாகுமா?** |
| **2.** | **விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்ய, ரத்து செய்ய முகாந்திரம் உள்ளதா?** |
| **3.** | **விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நிலை நிற்கத்தக்கதா?** |
| **4.** | **மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த இடைநிலை மனு எண்.7/2026 மனு அனுமதிக்கத்தக்கதா?** |
| **5.** | **இம்மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதா?** |

12. விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினர்கள் எவ்வாறு அழைக்கபட்டனரோ அவ்வாறே இம்மேல்முறையீட்டிலும் இதன்கீழ் அழைக்கப்படுவர்.

13. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

<u>பிரச்சனை எண். 1 கான தீர்வு :</u>

14. மேல்முறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனு எண்.7/2026 மனு அபிடவிட்டில் தாவா சொத்து வாதியின் தந்தை கிருஷ்ணசாமி நீண்ட காலம் அனுபவித்து வந்து, தனது பெயரில் வா.சா.ஆ.1 – 03.01.2014 ம் தேதிய தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்து, தாவா சொத்தினை தனக்கு பாத்தியப்படுத்தி, சுவாதீனம் ஒப்படைத்து விட்ட நிலையில், விசாரணை நீதிமன்றம் தனது தீர்ப்புரையில் தாவா சொத்தில் வாதியின் தந்தை கிருஷ்ணசாமியின் நீண்ட

கால அனுபவத்தை நிரூபிக்கும் வகையில், வாதியின் தந்தை கிருஷ்ணசாமியை வாதி தரப்பில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், ஜங்கால்பட்டி கிராமத்தில் உள்ள நபர்கள் எவரையும் விசாரிக்கவில்லை என்றும், தாவா சொத்தில் கட்டுமானம் கட்ட வானம் தோண்ட வந்த நபர்களை வாதி விசாரிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது என்றும், எனவே, வாதியின் தந்தை கிருஷ்ணசாமி, ஜங்கால்பட்டி கிராமத்தை சேர்ந்த K. M. பாண்டியராஜன் என்ற சுருளி, வானம் தோண்ட வந்த ஈஸ்வரன் மற்றும் ஆணையாளர்கள் (பசுமை வீடு) ஆகியோரை சாட்சியாக விசாரிக்க வேண்டியுள்ளதால் அசல் வழக்கினை விசாரணை நீதிமன்றத்திற்கு சாட்சிய விசாரணைக்கு மீண்டும் அனுப்ப வேண்டியுள்ளார்.

15. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41 விதி 23 – ன் கீழ் மேல்முறையீடு நீதிமன்றம் அசல் வழக்கினை மறு விசாரணைக்கு வேண்டி விசாரணை நீதிமன்றத்திற்கு மீண்டும் அனுப்பலாம் என கூறப்பட்டுள்ளது.

Remand of case by Appellate Court.— Where the Court from whose decree an appeal is preferred has disposed of the suit upon a preliminary point and the decree is reversed in appeal, the Appellate Court may, if it thinks fit, by order remand the case, and may further direct what issue or issues shall be tried in the case so remanded, and shall send a copy of its judgment and order to the Court from whose decree the appeal is preferred, which directions to re-admit the suit under its original number in the register of civil suits, and proceed to determine the suit; and the evidence (if any) recorded during the original trial shall, subject to all just exceptions, be evidence during the trial after remand.

16. உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 41 விதி 23 பிரகாரம் அசல் வழக்கில் அவசியமான எழுவினாக்கள் வனையப்பட வேண்டியிருப்பின் அத்தகைய எழுவினாக்கள் வனைந்து அவை தொடர்பாக சாட்சிய விசாரணை வேண்டியிருப்பின் சாட்சிய விசாரணை மேற்கொள்ள மற்றும் விதி 23A – ன்கீழ் புத்துரு விசாரணை அவசியமெனில் மறு விசாரணைக்காக விசாரணை நீதிமன்றத்திற்கு மீண்டும் அனுப்பலாகும்.

17. இவ்வழக்கில் விசாரணை நீதிமன்றம் எந்த ஒரு அவசியமான எழுவினாவும் விடுபடவில்லை. மேலும், மனுதாரர் / மேல்முறையீட்டாளர் மனுவில் குறிப்பிடும் சாட்சிகள் யாவரும் வாய்மொழி சாட்சியம் அளிக்க மட்டும் வேண்டப்பட்டுள்ளது. அவர்கள் மூலம் தாவா சொத்தில் வாதியின் சுவாதீனத்தை நிலைநிறுத்தக்கூடிய எந்த ஒரு ஆதரவான சான்றும் முன்னிடப்பட வேண்டவில்லை. மேலும் மனுவில் குறிப்பிட்டுள்ள சாட்சிகள் எவரும் தாவா சொத்தில் வாதி அனுபவத்தில் உள்ளார் என்பதை வெளிப்படுத்துவதற்குரிய தகுதியான போதுமான காட்சிகள் அல்ல. அத்தகைய சூழ்நிலையில் விசாரணை நீதிமன்றம் தனது தீர்ப்புரையில் சுட்டிக்காட்டியுள்ளது என்ற ஒரு காரணத்திற்காக அவசியமற்ற சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அசல் வழக்கினை விசாரணை நீதிமன்றத்திற்கு சாட்சிய விசாரணைக்காக வேண்டி மீண்டும் அனுப்பலாகாது.

18. மேலும் இம்மேல்முறையீடு தாக்கல் செய்து சுமார் 10 வருடம் நிலுவையில் இருந்து வந்து, தற்போது அசல் வழக்கில் சாட்சிய

விசாரணை செய்ய வேண்டியுள்ளதாக கூறி விசாரணை நீதிமன்றத்திற்கு மீண்டும் அனுப்ப கோருவது எதிர்தரப்பினர்களை வீண் அழக்கழிப்புக்கும் கஷ்டத்திற்கும் உள்ளாக்க கூடும்.

19. எனவே, மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில், மனுவில் கூறியுள்ள காரணத்திற்காக அசல் வழக்கு சாட்சிய விசாரணைக்காக வேண்டி விசாரணை நீதிமன்றத்திற்கு மீண்டும் அனுப்பலாகாது என இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.1 க்கு தீர்வு காண்கிறது.

<u>பிரச்சனை எண்கள். 2 மற்றும் 3 கான தீர்வு:</u>

20. அசல் வழக்கில் தாவா சொத்து என்பது "தேனி மாவட்டம், ஜங்கால்பட்டி கிராமம், உட்கடை கருப்பத்தேவன்பட்டி நத்தம் சர்வே எண்.465, புது நத்தம் சர்வே எண்.465/1 – ல் கிழமேலடி 28 தென் வடலடி 32 க்கு மொத்தம் 896 சதுரடி அளவுள்ள காலி மனையிடம் ஆகும்.

21. மேற்படி தாவா சொத்து வாதியின் தந்தை கிருஷ்ணசாமியின் நீண்ட காலம் அனுபவம் செய்து வந்ததன் பேரில், கிருஷ்ணசாமி பெயரில் கிராம நிர்வாக அலுவலர் அனுபவ சான்றிதழ் வழங்கியுள்ளதாகவும், தாவா சொத்தை நீண்ட காலம் அனுபவம் செய்து வந்த வாதியின் தந்தை கிருஷ்ணசாமி தனது மகனான வாதிக்கு, வா.சா.ஆ.1 – 03.01.2014 ம் தேதிய தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி சுவாதீனத்தையும் ஒப்படைத்து விட்டார் என்றும், தாவா சொத்தில் பசுமை வீடு திட்டத்தின் கீழ் வீடு கட்ட வாதி தரப்பில், வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மனு செய்து அதன் பெயரில் தனது பெயரில் வா.சா.ஆ.2

வேலை தொடங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதனைத் தொடர்ந்து தாவா சொத்தினை 17.06.2014ம் தேதி ஊராட்சிமன்ற பணியாளர்கள் பார்வையிட்டு, அளவீடு செய்தனர் என்றும், 18.06.2014ம் தேதிய தாவா சொத்தில் வீடு கட்ட வானம் தோண்ட முயன்ற போது, 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் போன் மூலம் வாதியை மிரட்டியதாகவும், எனவே, 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் மீது 20.06.2014 மற்றும் 15.07.2014ம் தேதிகளில் வீரபாண்டி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டு, அதற்கு புகார் மனு ஏற்பு ரசீது வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 கொடுக்கப்பட்டது என்றும், புகாரினை விசாரித்த வீரபாண்டி காவல் நிலைய காவல்துறையினர் உரிமையியல் சம்பந்தப்பட்டது என கூறி நீதிமன்றத்தை அணுகுமாறு அறிவுறுத்தி வாதி, பிரதிவாதிகளிடம் எழுதி வாங்கி கொண்டனர் என்றும், தாவா சொத்து வாதியின் தந்தை கிருஷ்ணசாமி நீண்ட காலமாக அனுபவம் செய்து வந்த பின்னர், வா.சா.ஆ.1 மூலம் வாதிக்கு பாத்தியப்படுத்தி சுவாதீனம் ஒப்படைத்து விட்டார் என்றும், தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதே வாதி தரப்பு வழக்காகும்.

22. மாறாக தாவா சொத்து பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் பிரகாரம் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் தந்தை வெள்ளையத்தேவருக்கு பாத்தியப்பட்டு, பி.வா.சா.ஆ.1 பிரகாரம் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்தில் தாவா சொத்தான வடமேற்கில் கண்ட சுமார் 900 சதுரடி அளவு கொண்ட இடத்தினை தானியங்கள் உலர்த்தும் களமாக பயன்படுத்தி வருவதாகவும்,

மோசடியாக பெற்ற அனுபவ சான்றிதழ் அடிப்படையில், வாதி பெயரில் அவர் தந்தை கிருஷ்ணசாமி வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்துள்ளார் என்றும், தாவா சொத்தில் வாதிக்கோ அவர் தந்தை கிருஷ்ணசாமிக்கோ எக்காலத்திலும் உரிமையோ அனுபவமோ இல்லை என்றும், வாதி பெயரில் வழங்கப்பட்ட வா.சா.ஆ.2 வேலை உத்தரவு, வா.சா.ஆ.9 மூலம் ரத்து செய்யப்பட்டு விட்டது என்றும், தாவா சொத்து 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு, அவர்கள் அனுபவத்தில் உள்ளது என்பதே 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்காகும்.

23. இவ்வழக்கு தாவா சொத்தினை பொறுத்து வாதி அனுபவத்திற்கு 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கிடப்பட்டுள்ளது. நிரந்தர உறுத்துக்கட்டளை தொடர்பான வழக்கில் வழக்கு காலத்தில் தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதை வாதி தகுந்த சாட்சி சான்றாவணம் மூலம் நிரூபிக்கவில்லை.

24. சொத்தின் அனுபவத்தை அது கட்டுமானமாக இருப்பின் அதன் உண்மை அனுபவம் (Corpus possendi) மூலம் நிரூபிக்க வேண்டும். சொத்து காலி மனையாக இருப்பின் அதன் உரிமை மூலத்தை நிரூபிப்பதன் வாயிலாக நிரூபிக்கலாம். மேலும், சொத்து காலி மனையாக இருப்பின் அதன் உரிமை மூலத்தை நிரூபிப்பதன் மூலம் உரிமை மூலத்தினை தொடர்ந்து அனுபவம் என்ற சட்ட விதி உள்ளது.

25. இவ்வழக்கில் தாவா சொத்து என்பது நத்தம் காலி மனையிடமாகும். தாவா சொத்தில் வாதி வா.சா.ஆ.1 அடிப்படையில் உரிமை மூலம் அனுபவம் உள்ளதாக கூறியுள்ளார். வாதி தரப்பு வழக்கு பிரகாரம் தாவா சொத்து வாதியின் தந்தை கிருஷ்ணசாமியின் நீண்ட கால அனுபவத்தில் இருந்து வந்த பின்னர் அவர் அதனை வாதிக்கு வா.சா.ஆ.1 மூலம் பாத்தியப்படுத்தி சுவாதீனம் ஒப்படைத்து விட்டார் என்பதாகும். தாவா சொத்தினை வாதிக்கு வா.சா.ஆ.1 மூலம் பாத்தியப்படுத்திய வாதியின் தந்தை தான சொத்தான தாவா சொத்து அவரது நீண்ட கால அனுபவத்தில் இருந்து வருவதாக வா.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ளார்.

26. தாவா சொத்து நத்தம் இடமாகும். தாவா சொத்து வாதியின் தந்தை நீண்ட கால அனுபவத்தில் இருந்து வந்தது என்பதை வெளிப்படுத்தக்கூடிய தகுந்த தெளிவான சாட்சிய சான்றாவணம் ஏதும் முன்னிடவில்லை. வாதி தரப்பில் தாவா சொத்தில் வாதியின் தந்தை அனுபவத்தில் உள்ளார் என்பதற்கு கிராம நிர்வாக அலுவலர் அனுபவ சான்றிதழ் வழங்கியதாக கூறப்பட்டுள்ளது. நத்தம் என்ற நிலையில் அதன் அனுபவம் குறித்து சான்றிதழ் வழங்க கிராம நிர்வாக அலுவலருக்கு அதிகாரம் இல்லை. அவ்வாறான நிலையில், கிராம நிர்வாக அலுவலர் வழங்கியதாக கூறப்படும் அனுபவ சான்றிதழ் தாவா சொத்தில் வாதியின் தந்தை அனுபவித்து வந்தார் என்பதற்கு தகுந்த சான்றாக ஏற்க இயலாது.

27. மேலும் வாதி தரப்பு வா.சா.ஆ.7 மாவட்ட ஆட்சியர் அலுவலர் வழங்கிய தகவல் மற்றும் அதனுடன் இணைந்த "அ" பதிவேடு நகல் மூலம் சர்வே எண்.405 விஸ்தீரணம் ஏக்கர் 7 செண்டு 99 கிராம

நத்தமாக வகைப்பாடு செய்யப்பட்டு, அவர் பெயரில் நத்தம் பட்டா ஏதும் வழங்கப்படவில்லை என்பது நன்கு புலனாகிறது.

28. தாவா சொத்து வாதியின் தந்தை கிருஷ்ணசாமிக்கு பாத்தியப்பட்டு, அவரிடம் நீண்ட அனுபவத்தில் உள்ளது என்பதற்கு, வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணம் தவிர வேறு ஆவணம் இல்லை. வா.சா.ஆ.1 எவ்வித அடிப்படை ஆவணம் இன்றி வாதியின் தந்தையால் ஏற்படுத்தப்பட்டது. வா.சா.ஆ.1 தாவா சொத்தில் வாதியின் தந்தை நீண்ட அனுபவத்தில் இருந்து வந்தார் என்பதற்கு சான்றாக ஏற்கலாகாது. வா.சா.ஆ.2 உரிய ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு, அளவீடு செய்து உறுதி செய்த பின்னரே அது முழுமை பெறும். மேலும், வா.சா.ஆ.9 மூலம் வா.சா.ஆ.2 ரத்து செய்யப்பட்டுள்ளது.

29. 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்து மற்றும் அதன் மொத்த விஸ்தீரணம் பி.வா.சா.ஆ.1 மூலம் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தந்தை வெள்ளையத்தேவருக்கு பாத்தியப்பட்டது என எதிர்வாதிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1 சொத்து விவரத்தில் அதன் சர்வே எண் குறிப்பிடவில்லை. மேலும், பி.வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தின் ஒரு பகுதி தான் தாவா சொத்து என்பதை நிலைநிறுத்தக்கூடிய சாட்சிய சான்றாவணங்கள் ஏதும் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் முன்னிடவில்லை. மேலும், தாவா சொத்து காலி மனை என்ற நிலையில், 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் முன்னிடப்பட்ட பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் தாவா சொத்துடன் தொடர்புடையவை அல்ல.

30. மேலும், தாவா சொத்து 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு, அவர்கள் அனுபவத்தில் உள்ளது என்பதை 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தகுந்த சாட்சிய சான்றாவணம் மூலம் நிரூபிக்கவில்லை.

31. தாவா சொத்து 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு, அவர் அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிக்கவில்லை என்பதை வாதிகள் சாதகமாக கொள்ளலாகாது. தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டு, அவர் அனுபவத்தில் உள்ளது என்பதை மெய்ப்பிக்க வேண்டிய சுமை, முதல்நிலை பொறுப்பு வாதியைச் சார்ந்ததாகும். 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்கின் பாதகத்தை வாதிக்கு சாதகமாக கொள்ளலாகாது.

32. இவ்வழக்கில் தாவா சொத்தில் வாதிக்கு வா.சா.ஆ.1 மூலம் எவ்வித உரிமை மூலம் எழவில்லை. எனவே, உரிமை மூலத்தை தொடர்ந்து அனுபவம் உள்ளது என்ற சட்ட நியதி, வாதிக்கு ஆதரவாக இல்லை. தாவா சொத்து வாதியின் தந்தை கிருஷ்ணசாமியின் அனுபவத்தில் இருந்து வந்தது என்பதை வாதி தகுந்த சாட்சிய சான்றாவணம் மூலம் நிரூபிக்கவில்லை. ஆதலால் தாவா சொத்தில் வா.சா.ஆ.1 ன் பேரில் வாதிக்கு உரிமையும் பாத்தியமும் எழாது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

33. மேற்கண்ட பரிசீலனை அடிப்படையில் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறுக்கீடு செய்ய ரத்து செய்ய முகாந்திரம் இல்லை என்றும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரை

மற்றும் தீர்ப்பாணை நிலைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் பிரச்சனை எண்கள்.2 மற்றும் 3 க்கு தீர்வு காண்கிறது.

**<u>பிரச்சனை எண்.4 கான தீர்வு:</u>**

34. பிரச்சனை எண்.1 தீர்வின் அடிப்படையில், இடைநிலை மனு எண்.7/2026 மனு அனுமதிக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் பிரச்சனை எண்.4 க்கு தீர்வு காண்கிறது.

**<u>பிரச்சனை எண்.5 கான தீர்வு:</u>**

35. பிரச்சனை எண்கள். 1, 2 தீர்வுகளின் அடிப்படையில் மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கத்தக்கதல்ல என பிரச்சனை எண்.5 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக,**

1. இம்மேல்முறையீடு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. தேனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண். 142/2014 வழக்கில் கடந்த 24.04.2015ம் தேதியன்று பிறப்பித்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

3. இ.ம.எண்.7/2026 மனுவானது தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

4. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் தட்டச்சு

செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

GEETHA Digitally signed by GEETHA Date: 2026.06.19 12:06:41 +0530

சார்பு நீதிபதி,
தேனி.

<u>மேல்முறையீட்டாளர் தரப்பு கூடுதல் சாட்சி :–</u> – இல்லை
<u>மேல்முறையீட்டாளர் தரப்பு கூடுதல் சான்றாவணம் :–</u> – இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு கூடுதல் சாட்சி :–</u> – இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு கூடுதல் சான்றாவணம் :–</u> – இல்லை

GEETHA Digitally signed by GEETHA Date: 2026.06.19 12:06:49 +0530

சார்பு நீதிபதி,
தேனி.

**<u>நகல்</u>**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேனி.